**செய்தி வெளியீடு எண்:359** **நாள் :03.07.2014**

# செய்தி வெளியீடு

## தனியார்துறை பாதுகாப்பு சேவைப் பணிகளில் வேலைவாய்ப்பினை பெறும் வகையில் இலவச திறன் எய்தும் பயிற்சித் திட்டம்

நாட்டின் பொருளாதார வளர்ச்சி காரணமாக பெரு மற்றும் குறு நகரங்களின் வளர்ச்சியானது பெரிதும் வியக்கத்தக்க அளவில் விரிவடைந்து கொண்டே வருகிறது. இதன் விளைவாக உயர்ந்து வரும் அடுக்குமாடி கட்டிடங்கள், பிரம்மாண்ட வணிக வளாகங்கள், தனிக் குடியிருப்புகள், தொழில் நிறுவனங்கள் , வியாபார நிறுவனங்கள் என பல்வகையில் நகரங்கள் விரிவடைந்து கொண்டே வருகிறது. ஆனால், இவ்வளர்ச்சிக்கு ஏற்ப பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ளும் போது பயிற்சி பெற்றவர்கள் மிக குறைவான அளவில் உள்ளனர். எனவே, இதனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வாயிலாக இளைஞர்கள், தனியார்த் துறையில் வேலைவாய்ப்பினை பெறும் வகையில் பாதுகாப்பு சேவைப் பணிகள் குறித்து 21 நாள் திறன் எய்தும் பயிற்சியினை தமிழ்நாடு காவல் துறையுடன் இணைந்து வழங்க உள்ளது. இத்திறன் எய்தும் பயிற்சி முழுக்க முழுக்க இலவசமாகும். **பயிற்சி நேரம் தினசரி காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.** பயிற்சியின் முடிவில் திருப்திகரமாக பயிற்சியினை நிறைவு செய்யும் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியின் போது பயிற்சியாளர்களுக்கு தினமும் **தேனீர்** மற்றும் **மதிய உணவு இலவசமாக** வழங்கப்படும். இப்பயிற்சியில் சேர **குறைந்தபட்சம் 8ம்** **வகுப்பு** தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். உடல் ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும். **வயது வரம்பு 18 முதல் 45க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.**

பயிற்சியின் இரண்டாம்கட்டம் சென்னை-83, அசோக் நகரில் உள்ள காவல் துறை பயிற்சி கல்லூரி மைதானம், சென்னை-54, ஆவடியில் உள்ள RC மைதானம் மற்றும் மதுரை,

திருநெல்வேலி, துத்துக்குடி, திருச்சி, கோவை, சேலம், திருப்பூர், ஈரோடு மற்றும் வேலூர் ஆகிய மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் **அலுவலகத்தில்** வழங்கப்படும்.

இப்பயிற்சியில் சேர விருப்பம் உள்ளவர்கள் தங்களது **அசல் கல்விச் சான்று, சாதிச் சான்று, இருப்பிட முகவரிக்கான சான்றாக குடும்ப அடையாள அட்டையின் அசல் மற்றும் சமீபத்தில் எடுக்கப்பட்ட 2 புகைப்படங்கள் (passport size) கொண்டு வர வேண்டும். மேலும், இப்பயிற்சியில் சேர இச்சான்றுகளின் 2 நகல்களுடன், பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படும் விண்ணப்பத்தினையும் பூர்த்தி செய்து அளிக்க வேண்டும்.**

**இப்பயிற்சிக்கான விண்ணப்பங்கள் 7.7.2014 மற்றும் 8.7.2014 ஆகிய நாட்களில் மேற்குறிப்பிட்ட மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வழங்கப்படும்.** இத்தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு பிரிவு ஒன்றிற்கு 50 நபர்கள் வீதம் 250 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். அப்பயிற்சியின் முடிவில் தனியார் துறை பாதுகாப்பு சேவை நிறுவனங்களில் பணிபுரிய ஏதுவாக வேலைவாய்ப்பு முகாம்கள் நடைபெறும்.

பயிற்சியில் சேர விருப்பம் உள்ளவர்களை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மேற்கூறிய தினங்களில் **சென்னை-83 அசோக் நகர், காவல் துறை பயிற்சி கல்லூரி மைதானம் மற்றும் சென்னை-54 ஆவடி RC மைதானம்,** மதுரை, திருநெல்வேலி, துத்துக்குடி, திருச்சி, கோவை, சேலம், திருப்பூர், ஈரோடு மற்றும் வேலூர் ஆகிய மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் பயிற்சி மைதானத்திலும் **நேரில் அணுகுமாறு முனைவர் பூ. முத்துவீரன் இ.ஆ.ப., இயக்குநர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**